**கம்பொல நகர சபை - 2022**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பொல நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பொல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகை திகதியில் முடிவடையாத 09 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | அடுத்த ஆண்டில் தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,185,087 ஆன 06 சந்தர்ப்பங்களுக்குரிய நிர்மாண பிடிகாசு, முத்திரை கட்டணங்கள் ரூபா 91,576 மற்றும் ரூபா 41,500 ஆன கேள்வி வைப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலங்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 118,150 தொகையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 44,240 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த உருக்கு அலுமாரியொன்று இரண்டு தடவை கணக்கீடு செய்தமையால் ரூபா 88,480 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய அட்டவணைகளில் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 44,808,405 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்தை தேடி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 03 கணக்கு உருப்படிகளின் மொத்தம் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 26,270,746 ஆன வேறுபாடு காணப்பட்டது. | வித்தியாசத்தை தேடி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | - | | |
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 164 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான வாடிவீடு 2019 – 2021 காலப்பகுதிக்குரிய நிலுவை முகாமைத்துவக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கொடுப்பனவு செய்யாமை தொடர்பாக மாவட்டக் குழுவிற்கு அனுப்புவதற்கு நடடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) ஆம் பிரிவு | 2016 – 2020 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய 17 காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கிவல்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவு | 06 கடை தொகுதிகளுக்குரிய 177 கடைகள் மதிப்பீடு செய்யாமல் 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | மதிப்பீடு செய்து வாடகையை அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 68,793,142 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,847,288 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 30,050,000 | 32,818,035 | 33,679,146 | 61,338,062 | 30,000,000 | 32,744,600 | 28,279,792 | 62,199,173 |
| (ii) | வாடகை | 25,895,000 | 24,894,465 | 31,399,143 | 85,091,101 | 24,595,000 | 18,256,184 | 11,470,945 | 91,595,779 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 5,150,000 | 4,179,517 | 4,283,422 | 1,237,412 | 4,450,000 | 3,465,176 | 2,546,113 | 1,341,317 |
| (iv) | ஏனைய வருமானம் | 50,000,000 | 49,384,242 | 39,847,868 | 49,740,237 | 51,500,000 | 38,705,614 | 36,988,288 | 40,203,864 |
| | | 111,095,000 | 111,276,259 | 109,209,579 | 197,406,812 | 110,545,000 | 93,171,574 | 79,285,138 | 195,340,133 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 61,338,062 ஆக இருந்ததுடன் அலகொன்றில் நிலுவை வீதவரி ரூபா 10,000 இற்கு மேற்பட்ட காணப்பட்ட 1549 வீதவரி அலகுகளில் ரூபா 36,652,736 ஆக இருந்தது. | ஆதனங்களைத் தடை செய்வதன் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 76,914,939 ஆன காணப்பட்டதுடன் நிலுவை கடை வாடகை ரூபா 100,000 இற்கு மேற்பட்ட கடைகளிலிருந்து 18 சந்தர்ப்பங்களுக்குரிய நிலுவை ரூபா 9,005,039 ஆக இருந்தது. | திருத்தங்களுக்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை கடை வாடகை தொடர்பாக முத்திரையிடல் அறிவித்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடை வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | பொது வியாபார தொகுதியின் 91 கடைகள் இதுவரை கேள்வி கோரப்படாதிருந்ததுடன் கேள்வி கோரப்பட்ட 105 கடைகளில் 78 புதிய கடைகள் உடள்படிக்கை செய்யப்படாமல் முறையற்ற வகையில் வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கேள்வி கோரி வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| **2.2.3** | **நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 39,460,000 ஆக இருந்தது. | இதுவரை கிடைக்கவில்லை. | ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை குண்டசாலை சேதன உர தொகுதிக்கு வழங்க முடியுமாக இருக்கையில் அதனை விட 82 கி.மீ அளவிலான தூரத்தில் அமைந்துள்ள தம்புள்ள திகம்பதன கழிவுப்பொருள் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த துடன் அதற்காக போக்குவரத்து செலவினமாக ரூபா 3,125,133 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களின் அளவு அதிகமாக இருந்தமை மற்றும் குண்டசாலை போக்குவரத்து சிரமமாக இருந்ததாக | போக்குவரத்து செலவினத்தை குறைத்தல் வேண்டும். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் சேரும் உக்காத கழிவுகளை சேகரித்தல் அல்லது வெளியேற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று இல்லாமல் இருந்ததுடன் சுற்றாடலுக்கு பாதகமான முறையில் விடுவிக்கப்பட்டிருந்தது. | உக்காத கழிவுகளை சேகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 17,473,100 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 12,073,861 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 3,849,644 ஆக இருந்தது. | பதிவழிப்பதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பதாக | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 மீதிகளின் கூட்டு:த்தொகை ரூபா 49,825,195 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய மீதிகளின் மொத்தம் ரூபா 3,786,706 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 4,330,196 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 225,000 ஆன முற்பண மீதியொன்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பரிசோதனையின் இறுதி தீர்மானம் கிடைத்த பின்னர் தீர்வு செய்வதற்கும் அங்கீகாரம் கிடைத்த பின்னர் தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | முற்பண மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா. 563,753 ஆன வழங்கப்பட்ட பின்னர் மறுக்கப்பட்ட 28 காசோலைகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 6,832,225,558 ஆன காணி மற்றும் கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஊ) | உழவு இயந்திரமொன்று, மோட்டார் வண்டி மற்றும் வண்டில்கள் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் பௌதீக ரீதியாக இல்லாமல் இருந்ததுடன் ரூபா 225,000 ஆன உழவு இயந்திரம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இவ்வாறான டிரேலர் ஒன்று இல்லையென்பதாக | நிறுவனத்திலுள்ள சொத்துக்களை சரியாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 9,041,373 ஆன 03 வாகனங்கள் ரூபா 613,800 ஆன 04 டீரேலர்கள் 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஏல விற்பனை செய்வதற்கோ அல்லது திருத்தம் செய்வதற்கோ நடவடிக்கை எடுப்பதாக | கைதவிர்ப்பதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 96,366,315 ஆன கடன் தொகையைப் பயன்படுத்தி 03 மாடிகளுடன் கூடிய கம்பளை வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 02 மாடிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 197 கடைகள் காணப்பட்டன. இக்கடைகளிலிருந்து 100 இற்கு மேற்பட்ட கடைகள் 17 ஆண்டு காலமாக வியாபார நடவடிக்கைககள் மேற்கொள்ளாமல் மூடப்பட்டிருந்தன. | மதிப்பீட்டாளர் ஒருவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்வி கோரி வருமானம் ஈட்டப்பட வேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குரிய சபை பயன்படுத்தும் பொப்நெட் இயந்திரத்தின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | குறித்த எந்தவொரு பதிவேடொன்று சபையிடம் இல்லாதிருந்ததாக | விடயங்களை கண்டுபிடித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீகுலவத்த அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணி 2003 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் 30 ஆண்டு காலப்பகுதிக்காக கம்பொல மெய்வல்லுனர் விளையாட்டுச் | அடுத்த நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசணைகளைப் | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் பாதுகாப்பு மற்றும் உரித்தினை |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் குத்தகையாளரால் நகர சபையின் அங்கீகாரமின்றி காணியின் ஒரு பகுதியை வேறொரு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | கம்பொல இலங்கை போக்குவரத்து சபை பேரூந்து தரிப்பிட கடைத் தொகுதி 2001 சனவரி 10 ஆந் திகதி முதல் 30 ஆண்டுகளுக்கு தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த துடன் அதன் குத்தகையாளரால் 42 கடைகளை அனுமதியின்றி நிர்மாணித்து நீர் மற்றும் மின்சாரம் அவராலேயே பெற்றுக் கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே 2001 சனவரி 10 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் ரூபா 4,513,416 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு கிடைத்த பின்னர் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | அனுமதியற்ற செயற்பாடுகளை நீக்கி சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் நிலுவை வருமானத்தையும் அறவிடல் வேண்டும். |
| (இ) | ஜயரத்ன மாவத்தையில் உள்ள வியாபார தொகுதி 2002 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் ரூபா 10,482,882 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| (i) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 21 பதவிகளில் 64 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2014 நவம்பர் 24 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட சுகாதார மற்றும் வீதித் தொழிலாளர்கள் 13 பேர் அலுவலக நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வருடக் கணக்காக இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக | பதவிகளுக்குரிய கடமைகள் கையளிக்கப்பட வேண்டும் |
| **(ஆ)** | **ஊழியர் கடன்**<br>2010 முதல் 2022 வரையான காலப்பதிக்குரிய காலப்பகுதியில் ஓய்வுபெற்ற, வேலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட சேவையை விட்டுச்சென்ற 41 உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களிடமிருந்து ரூபா 2,529,760 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடன்தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 36 வருமான விடயங்களில் 52 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 23 செலவின விடயங்களில் 35 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் விலகல்களைக் குறைக்கும் வகையில் பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வாளரின் கணக்காய்வு செயற்பாட்டிற்கு மேலதிகமாக ஏனைய விடயங்கள் கடமைகள் கையளிக்கப்பட்டமை காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகள் சுயாதீனமாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்ற முடியாதிருந்தது. | மேலதிக கடமைகளில் ஒரு பகுதி தற்போது அகற்றப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வு கடமை செயற்பாடுகள் மாத்திரம் கையளிக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்த போதும் அவற்றை அடைந்து கொள்வதற்கும் செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்ளவும் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |